★

Registered as a Newspaper in Ceylon — விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

National Tamil Daily — தேசிய தினசரி

வரோதி பங்குனி 5 திங்கள் பிறை 4 (18-3-65) வியாக்கழமை

தேர்தல் தினத்தில் தவறணைகள் கள்ளுக் கடைகள்!

இம்மாதம் 22-ம் திகதி அதாவது அடுத்த திங்கட்கிழமை இலங்கையின் பார்லிமெண்ட் தேர்தல் நடைபெறுகிறது. 149 பிரதிநிதிகளை (இருவர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுவிட்டனர்) தெரிவு செய்வதற்காக இலங்கை வாக்காளர் அன்றைய தினம் வாக்களிப்பர். இத்தேர்தலையொட்டி புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன பலருக்கும் இது தெரியும்.

வாக்களிப்பதற்கு முன்பு போல் வாகனங்களில் செல்ல முடியாது. வாக்களிப்பு காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். மாலை 6 மணி வரை வாக்களிக்கலாம். வாக்களிப்பு நிலையத்துக்குள் சென்று 6 மணிக்குள் வாக்குச் சீட்டையும் பெற்றுக் கொண்டால் 6 மணி தாண்டியபோதிலும் வாக்களிக்க உரிமையுண்டு. காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரைதான் வாகனங்களில் வாக்களிக்கச் செல்ல முடியாது. காலை 8 மணிவரை வாக்களிப்பு நிலையத்துக்குச் சமீபம் வரை வாகனங்களில் செல்லலாம்!

தேர்தல் தினத்தைஒட்டி மூன்று தினங்களுக்கு சாராயத் தவறணைகள் மூடப்பட்டிருக்கும். ஞாயிறு, திங்கள், செவ்வாய் ஆகிய மூன்று தினங்களிலும் சாராயத் தவறணைகள் மட்டுமன்றி வெளிநாட்டுக் குடிவகைகள் விற்கப்படும் கடைகள் மதுபானச்சாலைகளும் மூடப்பட்டிருக்கும் மதுபானங்கள் விற்கப்படும் ஹோட்டல்கள், போசனசாலைகளில் மதுபானவிற்பனை இந்த மூன்று தினங்களிலும் தடை செய்யப்படும். ஆனால் யாழ்ப்பாணப் பகுதியில் கள்ளுக்கொட்டிலிகளுக்கு...!

வாகனங்களுக்கு தடை எப்போது?

1100 வாக்காளருக்கு வாகன வசதி

யாழ். தேர்தல் அதிகாரி அனுமதி

150 பொலிஸார் இங்கு கடமையாற்ற வருகின்றனர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் தினத்தில் வாகனங்களில் செல்ல வாக்களிப்பதற்கு 1100 வாக்காளருக்கு யாழ்ப்பாணத் தேர்தல் அதிகாரி அனுமதி வழங்கியுள்ளார். வலதுகுறைந்தவர்கள், கோயாளிகள் வைத்திய அதிகாரிப் பத்திரங்களுடன் தங்களுக்கு வாகனத்தில் செல்ல அனுமதியளிக்குமாறு கோரி மனுச்செய்திருந்தனர். பலரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

முதன் முடிவு

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தொகுதிகளின் வாக்குகள் யாவும் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் அன்றிரவே எண்ணப்படும் யாழ்ப்பாணம் அல்லது நல்லூர்த் தொகுதியின் வாக்குகள்தான் முதலில் எண்ணத்தொடங்கப்படும் என்றும் முதல் முடிவுகள் அநேகமாக கன்னிரவுக்குமுன் வெளியாகுமென்றும் தேர்தல் காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

150 பொலிசார் இங்கு வருவர்

தேர்தல் சமயத்தில் இங்கு கடமையாற்றும்பொருட்டு கொழும்பு, களுத்துறை ஆகிய இடங்களிலிருந்து 150 பொலிசார் இங்கு வந்துசேரவிருக்கின்றனர். இராணுவமோ இராணுவப் பொலிசாரோ இங்கு சேவைக்கு அழைக்கப்படவில்லை.

—

வசாவிளான்

22-ம் திகதி வீதிகளில் பஸ்கள் ஓடியவண்ணம் இருக்கும்

இ. போ. ச. வகுத்துள்ள திட்டம்

கொழும்பு, புதன்

தேர்தல்தினமான வருகிற திங்கட்கிழமை பஸ்சேவை ஒழுங்காக நடைபெற கவனமான திட்டம் ஒன்றை இ. போ. ச. தயாரித்திருக்கிறது.

வாக்களிப்பு நிலையங்கள் பலவற்றை உள்ளடக்கும்முறையில், அதிகாலைமுதல் பஸகள் வீதிகளில் ஓடத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சிரேஷ்டஅதிகாரிகள் ஆங்காங்கே பஸ சேவையை மேற்பார்வையிடுவார்கள்.

கொழும்பு நகரில் பஸ் சேவையைபொட்டி வரனெவித்தொடர்புநிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பஸகளைப் பழுதுபார்க்க, நடமாடும் பழுதுபார்க்கும் வண்டிகள் கடமையிலீடுபடும். சாரதிகள், கண்டக்டர்கள் ஆகியோர் உடனடியாகச் சேவையிலீடுபட பல ஒழுங்குகள் மேற்கொள்ளப்படடிருக்கின்றன.

பொதுவாக வருகிற திங்கட்கிழமை, 22-ம் திகதி வீதிகளில் பஸ்கள் அடிக்கடி ஓடிக்கொண்டிருக்கும் காட்சிகளைக் காணலாம்.

"மார்ச் 22-ல் யு. என். பி. அதிகாரத்துக்கு வரும்"

டட்லி ஜோஸ்யம்

அகலவத்தை, புதன்

"கடந்த சில வாரங்களில் ஏழு மாகாணங்களிலும் நான் சுற்றுப்பிரயாணம் செய்தேன். அங்கு கண்டவைகளிலிருந்து எனது கட்சிக்கு வெற்றி நிச்சயம் என்பது தெரிகிறது" என ஐக்கியதேசியக்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயகா தேர்தல்பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

"மக்கள் இப்போது நல்ல பாடம் படித்துவிட்டார்கள். பெரும்பான்மை மக்களுக்கு சோஷலிஸத்தில் வெறுப்பு ஏற்பட்டுவிட்டது." எதுவாயினும் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் முடிவுக்கு வழிவகுத்துவிட்டதற்காக மார்க்சியவாதிகளுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயம் லங்காசமசமாஜக்கட்சியின் அழிவுக்குவழிஏற்படுத்தியதற்காக பிரதமருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" என திரு. டட்லி குறிப்பிட்டார்.

"மார்ச் 22-ம் திகதி யு. என். பி. பதவிக்குவரும் என்பதில் சந்தேகமில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"ஹிந்தி ஆட்சிமொழி பற்றி இதுவரை உத்தரவு இல்லை"

—தமிழ் நாட்டு முதலமைச்சர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 22-ம் திகதி திறக்கப்படும்

சென்னை, மார்ச் 17

ஹிந்தி ஆட்சிமொழியாவது பற்றி மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டு அரசாங்கத்துக்கு உத்தரவு எதையும் இதுவரை அனுப்பவில்லை என முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் கூறினார்.

அதேசமயம் ஆட்சிமொழியில் திருத்தம் செய்வது சம்பந்தமாகவும் இதுவரை என்னிடம் நகலும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என முதன்மந்திரி கூறினார்.

இதற்கிடையில் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி சம்பந்தமாக மூடப்பட்டிருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வருகிற 22-ம் திகதி திறக்கப்படவிருக்கிறது. இத்தகவலை பல்கலைக்கழக உபவேந்தர் டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அறிவித்தார்.

—

கொலை வழக்கு விசாரணை ஆரம்பம்

வாழ்ப்பாணம், புதன்

வசாவிளான் கொலைவழக்கு நேற்றுக்காலை வடபகுதி அவைசல் நீதிமன்றத்தில், நீதியரசர் பி. ஸ்ரீஸகந்தராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் வசாவிளானைச் சேர்ந்த குட்டியுலகத்தில் பாரி என்ற பெண்ணை 64-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம் திகதி சின்னக்குட்டி நாகராசா என்பவர் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு கே. சிவகுப்பிரமணியம், ஆர். கண்ணுத்துரையின் உதவியுடனும், திரு ரி. தம்பிரத்தினத்தின் உதவியுடனும் ஆஜராகுமாறு எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் திரு ஏ. குமரகுரு நியமிக்கப்பட்டிருந்தார்.

—

விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

தலைமைஞர் கொலை வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அவைசல் நீதிமன்றத்தில் நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது இன்ஸ்பெக்டர் ஒருவர் சாட்சியமளிக்க வராததால் இன்று காலைவரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

"வகுப்புவாதத்தை எதிர்க்க புரட்சி வாதிகளுடன் சேருக!"

தமிழ்ப்பேசும் மக்களுக்கு திரு. சமரக்கொடி அழைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

"தமிழ்பேசும் மக்கள் இதுவரை காலமும் ஏற்று வந்த தலைமையை மாற்றி சிங்களவகுப்பு வாதத்தை எதிர்த்துப் போராடுகின்ற புரட்சிசக்திகளுடன் இணைய வேண்டும்" என்று புரட்சிவாதசமசமாஜக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. எட்மன்ட் சமரக்கொடி குரும்பசிட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறைத் தொகுதியில் புரட்சிவாத சமசமாஜக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. வி. காராளசிங்கத்தை ஆதரிக்குமுகமாக குரும்பசிட்டி கேணிக்கரை மைதானத்தில் திரு. வி. கிருஷ்ணசாமி தலைமையில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

திரு. எட்மன்ட் சமரக்கொடி தொடர்ந்து பேசியதாவது:-

தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளுக்காக உண்மையான போராட்டம் நடத்த ஆயத்தமாகவிருக்கிறார்கள். சோல்பரி அரசியல் திட்டம் தமிழ்பேசும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைத் தரமறுத்து விட்டது. எனவே இச்சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். அதற்கு மாகாண அடிப்படை மூலம் எதனையும் செய்ய முடியாது. இதனை ஓர் தேசியப் பிரச்னையாகவே கருத வேண்டும். தற்போது உள்ள அரசியல் திட்டத்தை மாற்றியமைத்து தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய ஒரு அரசியல் திட்டத்தைப் புகுத்த வேண்டுமானால் தேசியப் போராட்டமொன்றினை தேசியக்கட்சி மட்டுமே ஆரம்பிக்க வேண்டும்.

திரு. வி. காராளசிங்கம் பேசியதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ளவர்களுக்காகவுமன்றி, மலைநாட்டுத் தமிழர்களுக்காகவும், விவசாயிகள், தொழிலாளர்களுக்காகவும் போராடிவரும் கட்சி புரட்சிவாத சமசமாஜக்கட்சியே. இப்படியான கூட்டணி மூலம் அரசாங்கத்தைப் பணியச் செய்வதோடு, புதிய அரசியல் திட்டத்தையும் உருவாக்க முடியும்.

திருவாளர்கள்: ஆர். பாலு தேவன், எஸ். கடராசா, ஜோர்ஜ் பெரேரா உட்பட மற்றும் பலரும் பேசினர்.

"ஐ. தே. கட்சி அரசாங்கம் 'கஞ்சித்தொட்டி' போல் இருக்கும்"

பிரதமர் தேர்தல் பிரசாரம்

திவுலப்பிட்டி, புதன்

"ஐக்கிய தேசியக் கட்சி ஒரு அரசாங்கத்தை நிறுவுமானால் அது கஞ்சித் தொட்டியைப் போல்தான் இருக்கும்" என பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா இங்கு ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய போது குறிப்பிட்டார்.

தனது கட்சி அபேட்சகர் திரு ஜயக்கொடியை ஆதரித்துப் பேசுகையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டார்

"1947-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு அரசியல் கட்சியும் இலங்கை-இந்தியப் பிரச்னை பற்றிக் குறிப்பிட்டது. ஆனால் இந்தமுறை மட்டும் ஐ. தே. கட்சி அது பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை

"ஐ. தே. கட்சியின் காலத்தில் பௌத்தர்கள் தங்கள் உரிமையைப் பெற முடியாமல் இருந்ததல்லதான், பௌத்த ஆலோசனைக் கமிஷனை எனது அரசாங்கம் நிறுவியது. கமிஷனின் சிபார்சுகளில் சில ஏற்கனவே அமுல் நடத்தப்பட்டிருக்கிறது" என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

"கடந்த நாலரை ஆண்டு காலத்தில் நான் எதிர்நோக்கிய கஷ்டமான பிரச்னைகளைப் போல் எனக்கு முன்னிருந்த எந்தப் பிரதம மந்திரியும் எதிர்நோக்கவில்லை. சதிகளை மட்டுமின்றி, பாட்சாலைகளை மேற்கொள்ளுதல், என்னைக் கம்பனிகளை மேற்கொள்ளுதல் ஆகிய விஷயங்களையும் நான் எதிர்நோக்க வேண்டியிருந்தது" என்றும் பிரதமர் கூறினார்.

—

வங்கி நிறுவ முடிவு

லண்டன், மார்ச் 17

நியூஸிலந்து தலைநகர் வெலிங்டனில் நடைபெறும் ஆசிய தூரகிழக்கு பொருளாதார கமிஷனின் 21-வது கூட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஒன்றை நிறுவ வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஜப்பானிய பிரதிநிதி தெரிவித்த இந்த யோசனையை இலங்கை உள்ளிட்ட பல நாடுகள் ஆதரித்தன.

பாரத சர்வதேச வர்த்தக மந்திரி திரு. மனுபாய்ஷா பேசுகையில் வரைதகத்தை விரிவுபடுத்த ஒரு வங்கி சார்ந்த முறை இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மணிவாக்கு

துன்பம், வருத்தம் யாவும் நன்மைக்காகவே வருகின்றன. வேர்க்க வேண்டும். இல்லாவிட்டால் வருத்தம் வரும். மற்றவர்கள் பறக்கிறார்கள் என்று பறக்க நினைக்க வேண்டாம். வேலைசெய்து எல்லோருடனும் அன்பாகப் பழகவேண்டும் இருந்து பார்த்தால் எல்லாம் தெரியும், எங்கும் எல்லாம் கடவுளே.

—ஸ்ரீயோகசுவாமிகள்.

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 5 உ (18-3-65)

அழியாத மை

வாக்களிப்புத் தினத்தில் ஆள்மாறாட்டம் நடைபெறுவதைத் தடுக்கும் பொருட்டு வாக்களிக்கச் செல்லும் வாக்காளரின் இடது கைப் பெருவிரலில் அழியாத மையினால் அடையாளமிடப்பட விருக்கிறது. வாக்காளர் பலரும் இதை நிச்சயம் வரவேற்பர்.

பொதுத் தேர்தலில் இலங்கை மக்கள் தங்கள் வாக்குகளை அளித்து அடுத்த ஐந்து வருடகாலத்துக்கு எந்தக்கட்சியை ஆட்சிபீடத்தில் வைப்பதென்பதைத் தீர்மானிப்பதற்கு இன்னும் சில தினங்களேயுள்ளன. இதற்குள் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களும் அரசியல் கட்சிகளும் தங்கள் வெற்றிக்காக தம்மால் இயன்ற அனைத்தையும் செய்ய முனைந்துள்ளனர். இது இயல்பு. அபேட்சகர்களினது பிரசாரம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. இச்சமயத்தில் வாக்காளர்கள் தங்களதுகடமையைநிதானமாகச் சிந்தித்து நன்கு உணர்ந்து கொள்ள வேண்டியது மிகமிக அவசியம். தேர்தல் அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெறுவது பெரும்பாலும் பொதுமக்களினது குறிப்பாக வாக்களிரினது கையில்தானுள்ளது.

வாக்களிப்புத் தினத்தில் ஆள்மாறாட்டம் நடைபெறுவதுண்டு. முன்னைய தேர்தல்களில் இவ்வித சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. இம்முறை ஆள்மாறாட்டம் நடைபெறுவதற்கும் பொருட்டு 'அழியாத மையினால்' வாக்காளரின் இடது கைப்பெருவிரலின் அடையாளமிடப்பட விருக்கிறது. வாக்காளருக்கு இது சில சிரமங்களை ஏற்படுத்தக் கூடுமெனினும் அவற்றைப் பொருட்படுத்தாது தங்களது பொன்னான வாக்குகளைப் பயன்படுத்த வேண்டியது அவர்களது உரிமையும் கடமையுமாகும். வாக்காளர் ஒவ்வொருவரது வாக்கையும் பாதுகாத்துக் கொள்வதற்கும் ஒருவருடைய வாக்குரிமையை வேறொருவர் பயன்படுத்திக் கொள்ளாமல் தடுப்பதற்குமே இந்த அழியாதமை உபயோகத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. வாக்களிப்பு நிலையத்தில் வாக்காளர் ஒருவருடைய இடது கைப்பெருவிரலில் 'அழியாத மை'யினால் அடையாளமிடப்பட்டதும், அவர் அந்த மையாயும்வரை சற்றுப் பொறுமையுடனிருந்தபின் வாக்குச் சீட்டைபெற்று தமது அபேட்சகரின் சின்னத்துக்கெதிராகப் புள்ளடியிட்டு அதன்பின் வாக்குச்சீட்டுப் பெட்டிக்குள் போடுவது நல்லது. 'மை' அடையாளமிடப்பட்ட இடது கையினால் வாக்குச் சீட்டைத் தொடாமலிருப்பதே சிறந்தது. மையூசப்பட்ட விரலால் வாக்குச் சீட்டைத் தொடும்பொழுது அந்த மை வாக்குச்சீட்டில் பதிந்துஅவை பழுதானவையாகக் கணிக்கப்படக்கூடும். இதனால் வாக்குரிமையை இழப்பதுடன் வாக்களிப்பு நிலையத்துக்கு வந்த சிரமமும் பயனற்றுப் போய்விடும். 'அழியாத மையினால்' விரலில் அடையாளமிட மறுப்பவர்களுக்கும் ஒரு தடவை அழியாத மையினால் அடையாளமிடப்பட்டவர்களுக்கும் வாக்குச்சீட்டு வழங்க மறுக்கப்பட்டுவிடும், வீணாக வாக்குரிமையை இழந்துவிடாமல் சிறு சிரமங்களைப் பொருட்படுத்தாமல் வாக்காளர் தமது பொன்னான வாக்குகளைப் பயன்படுத்துவார்களென்று நம்புகிறோம்.

பொதுத்தேர்தலும் அரசியல்கட்சிகளும் -9

திருகோணமலைத் தொகுதியின் தேர்தல் வரலாறு

திருக்கோணமலை அதன் இயற்கைத் துறைமுகத்தினாலும் திருக்கோணேசராலயத்தினாலும் பிரிட்டிஷாரின் கடற்படைத்தளம் இருந்ததனாலும் உலகப் பெயர் பெற்றது. தமிழருக்குப் பெருமைதரும் நகரமாக விளங்கிய இப்பகுதி சரித்திர காலத்துக்கு முன்பே சிறந்து விளங்கியது என ஆராய்ச்சியாளர் கூறியுள்ளனர்.

திருக்கோணமலைப் பகுதியில் கூறடியிச் செயகைதான் பிரதானமாக இருப்பினும் புகையிலை, தென்னைகளும் செய்கை பண்ணப்படுகின்றன. மீன்பிடித் தொழிலும் இப்பகுதியில விரிவடைந்துவருகிறது. சமீபத்தில் தேசியமயமாக்கப்பட்ட துறைமுகத்தில் போட்டிந்த தொழிற் சங்கங்களின் தகிடிடி இருப்பினும் தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு இத்துறைமுகம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. ஒரு காலத்தில் தமிழரே மகப பெரும்பான்மையினராக வாழ்ந்த திருக்கோணமலையில் இன்று 50.1 சத வீதம் தமிழரும் 42 சத வீதம் சிங்களவரும் 13.7 சத வீதம் முஸ்லிம்களும் வகம்கின்றனர். மற்றையோர் 14.5 சத வீதத்தினர் இந்துக்கள் 46.5 சத வீதம் வாழ்கின்றனர். 19 7 சத வீதம் பௌத்தர்களும், 17.4 சத வீதம் கிறிஸ்தவர்களும் 16 3 சத வீதம் முஸ்லிம்களும் வாழ்கின்றனர்.

வாக்களிப்பு விபரம்

1947-ம் ஆண்டில் பதிவு செய்ய பட்ட மொத்த வாக்காளர் தொகை 18,421. அந்த வருடத்தில் நடைபெற்ற பொதுத் தோதல் முடிவு விபரம்:-

எஸ் சிவபாலன் (தமிழ் காங்கிரஸ்)- 5,252

ஏ. வி. கனகசிங்கம் (யு என். பி.)- 3,225

ஈ. ஏ. பி. கன்டியால் சில்வா (ச)-877

பெரும்பான்மை 2 027

1952-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முடிவு விபரம்:-

என். ஆர். இராஜவரோதயம் (தமிழரசு	4,450
எஸ். சிவபாலன் (யு. என். பி.)	3,864
கே சிவபாதம் (கம்யூனிஸ்ட்)	1'403
பெரும்பான்மை	586

அப்பொழுது பதிவிசெய்யப்பட்டிருந்த வாக்காளர் தொகை 14,272

1956-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவு விபரம்:-

என். ஆர். இராஜவரோதயம் (தமிழரசு)	7,048
ஜேம்ஸ் அப்புகாமி (சுயேச்சை)	2,965
ஏ. ஐ இராஜசிங்கம் (சுயேச்சை)	2,373
பெருன்பான்மை	4 038

அப்பொழுது பதிவுசெய்யப்பட்டிருந்த வாக்காளர் தொகை 16,067

1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவு விபரம்:-

என். ஆர். இராஜவரோதம் (தமிழரசு)	8,872
ஆர். எம். துன்தாக்தீர் (சுயேச்சை)	1,311
ஏ. பீயதாசா (சுதந்திரக் கட்சி)	1,265
எஸ். லால். குணரத்தினு (லங்கா பிரஜா தந்திரக் கட்சி)	993
பெரும்பான்மை	4,083

அப்பொழுது பதிவுசெய்யப்பட்டிருந்த வாக்காளர் தொகை 19,024

1960-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற பொது தேர்தல் முடிவு விபரம்:-

என். ஆர். இராஜவரோதயம் (தமிழரசுக் கட்சி)	—8649
இ. ஆர். எஸ். குமாரசாமி (சுதந்திரக் கட்சி)	—4,614
கே பி. ஆரியதாசா (எம். ஈ பி.)	—63
பெரும் பான்மை	—4035

1963-ம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற இடைத் தேர்தலில் போட்டியிட்டு வாக்குகள் பெற்ற விபரம் வருமாறு:

எஸ். எம். மாணிக்கராசா (தமிழரசுக் கட்சி)	—11,532
ஏ. கர்மாலிஸ் அல்விஸ் (சுயேச்சை)	—5,721
பி. விஜயரத்தன் (சுயேச்சை)	—1,876
பெரும் பான்மை	—5,811

1965-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திரு எஸ். எம். மாணிக்கராஜா தமிழரசுக் கட்சி சார்பிலும், திரு. வி. ஆர். நவரத்தினராசா ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலும், திரு. எஸ். எச். சோமபாலா சுதந்திரக்கட்சி சார்பிலும் போட்டியிடுகின்ற இத் தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 27,643.

கவத்துமேடு

கமக்காரர்களுக்கு நன்மை தருமென்றும் அவர்களுடைய வேலையை சுலபமாக்குமென்றும் நினைத்த சில கருவிகளும் பொருட்களும் உண்மையில் நன்மை தருகின்றனவா என்று இப்பொழுது சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. இவற்றுள் முக்கியமாக மூன்றைக் குறிப்பிடலாம். உழவு மெஷின் என்று அழைக்கப்படும் 'ட்ராக்டர்', பூச்சிகள், களைகளைக் கொல்லும் கிருமிநாசினிகள், தண்ணீர் இறைக்கும் 'பம்பு'கள்.

நாறு. இருநூறு என்று ஏக்கர் கணக்கிலுள்ள நிலப்பங்குகளை உழுவதற்கு ட்ராக்டர்கள் மிகவும் உபயோகமான கருவிதான். ஆனால் எங்கள் நாட்டில் நெற்கமம் செய்வோரும் தோட்டக்காரரும் பரப்புக் கணக்கில்தான் நிலம் வைத்திருக்கிறார்கள். ட்ராக்டரின் புதுமையைக் கண்டவுடனே இவர்களும் அதை உபயோகிக்கத் துவங்கினார்கள். மாட்டுழவு வரவரக் குறைந்து விட்டது. மாட்டுழவு நடந்த காலத்தில் தனது வயற்பரப்பின் தன்மையும் அதிலுள்ள ஒவ்வொரு அங்குல நிலத்தின் விசேஷத்தையும் நன்றாக அறிந்த கமக்காரன், அதற்கேற்றவாறு ஆழமாகவோ அகலமாகவோ உழுது வந்தான். அதற்கு வேண்டிய அளவில் கூராகவும் மழுப்பாகவும், தட்டையாகவும் நீளமாகவும் பல திருத்தமான ஏர்முனைகளை செய்வித்துக் கொண்டான். இதனால் தான் நினைத்த மாதிரிக்கு நிலத்தைப் பண்படுத்த அவனால் முடிந்தது. ட்ராக்டரிலும் பலவிதமான ஏர்முனைகள் இருக்கின்றன. ஆனால் உழவை நடத்துபவர் நிலத்தின் சொந்தக்காரனாயில்லாவிட்டால் அதில் பிழைகள் இருக்கத்தான் செய்யும். ஆழம் மயிரிழை கூடிவிட்டால் அடியில் உள்ள மக்கியும் கல்லும் மேலே வந்து விடுகிறது. படை படையாக மண் புரட்டப்பட்டால் புல்லும் பூண்டும் அப்படியே காய்ந்து விடாமல் இருந்து விடும். இப்படியே கலப்மானதென்பதற்காக ட்ராக்டர் உழவு செய்து விட்டு பின்பு மாட்டுழவை நினைந்து ஏங்குவான் கமக்காரன். ட்ராக்டர் உழவினால் லாபமடைவது ட்ராக்டர் சொந்தக்காரரும் ட்ராக்டர் கொம்பனிகளுமே. அத்துடன் நம்நாட்டிலுள்ள கொல் தொழிலாளர் தச்சத் தொழிலாளர்களுக்கும்தொழில் குறைந்து விட்டது. கமக்காரனுக்கு எத்தனையோ வகையில் பலன் கொடுத்து வந்த கால் நடைகளும் குறைந்து விட்டன. ட்ராக்டர்களின் உபயோகம் கட்டுப்படுத்தப் பட்டால் அந்நிய செலவாணி மிஞ்சும், உள்ளூர் தொழிலாளிகளுக்கு வேலைவசதி அதிகரிக்கும், கால்நடைகளின் தொகை பெருகும், நிலமும் திருந்தும்.

ட்ராக்டர்களைப் போலவே கிருமிநாசினிகளும் சமீப காலத்தில் தோன்றிய நவீன மாய்கறிச் செடிகளிலும், புகையிலை, வாழை முதலியவற்றிலும் தோன்றும் பூச்சி புழுக்களைக் கொல்வதற்காக இவை உபயோகிக்கப்படுகின்றன. ஆனால் அவை மனிதர்களையும் கொன்று விடுகின்றன! கிருமி மருந்து உபயோகத்தால் காய்கறி உருபத்தி செருகிவிடுதென்பதில் சிறிதும் ஐயமில்லை. தோட்டக் காரனுக்கு ஒரு சிறந்த உதவி. ஆனாலும் கிருமிநாசினிகளினால் மாதம் மரணம் தற்கொலை செய்து கொள்பவர்களின் தொகை அதிகரித்து வருவதைப் பார்த்தால் அவற்றால் உண்டாகும் நன்மை அதிகமா தீமை அதிகமா என்று கேட்கத் தோன்றுகிறது. கிருமிநாசினி வருவதற்கு முன்பு தோட்டக்காரர் கடு சாம்பர் முதலிய கை மருந்துகளை உபயோகித்தார்கள். இன்று மருந்து அடிக்கப்பட்ட காய்கறி கீரைகளை முதலியவற்றிலும் மருந்தின் நச்சுச் சக்தி ஊடுருவி அவற்றை உண்பவர்களுக்கு தீங்கு செய்கிறதோ என்றும் கவலைபட வேண்டியிருக்கிறது.

தண்ணீர் பம்புகளால் நன்னீர் ஊற்றுகள் குறைந்து போகின்றன என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அவற்றின் உபயோகத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கமக்காரனின் நன்மையைக் கருதி வந்த இம் மூன்றும் உண்மையில் நன்மை தருகின்றனவா என்று தீர்மானிக்கும் காலம் வந்து விட்டது.

—நலப்பமை

ஐயோ! என்ன கொடுமை

இப்போது இலங்கையில் பொதுவாக எல்லோரும் மார்ச்சு 22 ம் திகதியைத்தான் ஆவலுடனும் கவலையுடனும் எதிர்பார்த்து வருகிறார்கள்.

நேர்மாறான வதந்திகள் அடிபடுகின்றன. யார் வெல்லுவர் என்பது திட்டமாகத் தெரியவில்லை. எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி பலம் கிடைக்காமல் போகலாமென்றும் பின்னர் ஸ்திரமான மந்திரிசபை அமைக்கப்படுமா என்பதும் நிச்சயமாகக் கூறமுடியாதென்றும் எந்தச் சமயத்திலும் எதுவும் நடக்கலாமென்றும் பலரும் கதைக்கிறார்கள். இன்னும் நாலே நாலு நாட்கள்தான் உள்ளன. மகாஜனங்களின் தீர்ப்பு என்ன என்பது தெரிந்துவிடும். யாருக்கு வாக்களிப்பது என்பதை நீங்கள் தீர்மானித்துவிட்டீர்களா?

* * *

தவறணைகளை அடுத்த ஞாயிறு, திங்கள், செவ்வாய் இம்மூன்று நாட்களும் மூடப்போவதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது. இதுவரை தேர்தல் தினத்தன்று மட்டும் ஒரே ஒரு நாள்தான் தவறணைகளை மூடுவர். ஆனால் இம்முறை மூன்று நாட்கள் மூடுவதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது வரவேற்கத்தக்கதே. இதைப்பற்றி ஓர் அன்பரிடம் கதைத்தபோது ஒரு வாரத்துக்கு முன்பே வேண்டிய சாராயத்தை சிலர் வாங்கி ஸ்டாக் செய்துவிடக் கூடுமென்றும் அதைத் தடுக்க முடியாதென்றும் சொன்னார்.

சிலர் சாராயத்தையும் பணத்தையும் கூட வாங்கிக் கொண்டு தமக்கிஷ்டமான போட்டி அபேட்சகருக்கு வாக்களித்து விடக் கூடுமென்றார். சாராயத்தாலும் பணத்தாலும் தேர்தலில் வெல்லலாமென்று எந்த அபேட்சகரும் எண்ணியிருந்தால், அவர் நிலை பரிதாபத்துக்குரியதாகும்.

* * *

வடமாகாணத்திலோ மரவரி முறை இருப்பதால் கள்ளுத் தவறணைகள் இல்லை. எங்கும் கள்ளு தாராளமாகக் கிடைக்கும். தேர்தல் தினத்தன்று கூட அதைத் தடுக்கமுடியாதென்றும், சாராயத்தவறணைகளையும், சீமைச்சரக்கு விற்பனையையும்தான் இங்கு தடுப்பதாகவும் அதிகாரிகளை விசாரித்ததில் தெரியவந்தது. தீவின் மற்ற இடங்களை விட வடமாகாண மக்களுக்கு, இந்த "சுதந்திரத்தை" காருண்ய அரசாங்கம் அளித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அமைதியாக தேர்தல் நடக்க வேண்டுமென்றே முன்றுநாட்களுக்கு தவறணைகளை மூட அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. மக்களின் வாழ்க்கை அமைதியாக முன்னேற, மதுவிலக்குக் கொள்கை, புத்தர்பெருமான் பஞ்சசீலத்தில் வற்புறுத்தியிருந்தும்கூட, எந்தக்கட்சியும் ஒரு வார்த்தைகூட தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடவில்லை. பாரதநாட்டில் மதுவிலக்குக்கொள்கையை அரசியல சட்டத்திலேயே வலியுறுத்தியிருக்கையில், இங்கு அதைப் பற்றி பௌத்த பிக்குகள்கூட பேசவில்லையே. என்ன செய்யலாம்!

* * *

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை இந்தியர் சங்கத்தில் தேவு ஏற்பட்டு, அக்கிரியாகயம் பூட்டியிருந்ததைப்பற்றி அன்று வருந்தி எழுதியிருந்தோமல்லவா? இப்போது தேர்தல் முறைப்படி மிக அமைதியாக நடந்ததாயும், மீண்டும்

(5-ம் பக்கம் பார்க்க)

பிரிட்டிஷ், சோவியத் வெளி நாட்டு மந்திரிகள் பேச்சு

லண்டன், மார்ச் 17

லண்டன் வந்திருக்கும்சோவியத் வெளிநாட்டுமந்திரி குரோமிகோ நேற்று வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டுவர்டுடன் வியட்நாம் பற்றியும், இதர உலக பிரச்னைகள் பற்றியும் பேச்சு நடத்தினர். பேச்சுக்களில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது. எனினும் மேலும் சில தினங்கள் அவர் லண்டனில் தங்கவிருப்பதாய் தொடர்ந்து பேச்சுவார்த்தை விருப்பதாயும் கூறப்பட்டது.

வியட்நாமில் அமெரிக்கா ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பதாய் திரு குரோமிகோ நேற்றைய பேச்சில் குறிப்பிட்டதாக அறிவிக்கப்பட்டது.

திரு குரோமிகோ நாளை பிரிட்டிஷ் பிரதமர் திரு வில்ஸனைச் சந்திப்பார்.

எனிக்கிழமை அவர் மாஸ்கோ திரும்புவார்.

வடவியட்நாமில்

அமெரிக்க யுத்தக்கப்பல்கள் பீரங்கிகளால் தாக்கின

சைகோன், மார்ச் 17

4 அமெரிக்க யுத்தக்கப்பல்கள் நேற்று வடவியட்நாம் கடற் பிரதேசத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்து, கடற்கரைக் கிராமங்களை பீரங்கி பிரயோகம் செய்து தாக்கியதாக வடவியட்நாம் அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருக்கிறது. அமெரிக்கா வடவியட்நாம்மீது ஆக்கிரமிப்பை விரிவுபடுத்தி வருவதாயும் அது கூறியிருக்கிறது.

தென்வியட்நாம் விமானப் படைத் தளபதி இதுபற்றிக் குறிப்பிடுகையில் எச்சமயத்திலும் வடவியட்நாமில் விமானத் தாக்குதல் இருக்குமவரை இது நீடிக்கும் என்றும் கூறினார்.

அநேகமாக ஒவ்வொரு நாளும் இது நடைபெறும் என அவர் குறிப்பிட்டார்.

அலபாமாவில் போலிஸ்-நீக்ரோக்கள் கைகலப்பு

பலருக்கு காயம்

மொண்ட்கோமரி, மார்ச் 17

கேற்று அலபாமாவில் 600 பேர் கொண்ட நீக்ரோ சிவில் உரிமை ஊர்வலத்தில் போலிஸாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. போலிஸார் ஊர்வலத்தைக் கலைக்க முயன்றபோது ஏற்பட்ட இக்கைகலப்பில் பலர் காயமடைந்தனர்.

இதே சமயம் ஜனாதிபதி ஜான்ஸன் நீக்ரோக்கள் வாக்குரிமை சம்பந்தமாக பார்லிமெண்டில் விடுத்த அறிக்கையை நீக்ரோ தலைவர்கள் வெகுவாக வரவேற்றிருக்கிறார்கள்.

நீக்ரோக்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வதில் தரித நடவடிக்கை எடுத்துக் கொள்வதில் ஜனாதிபதி மேற்கொள்ளும் முயற்சியை நீக்ரோ தலைவர் டாக்டர் மார்ட்டின் லூதர்கிங் வரவேற்றுப் பேசியபோது, "எந்த அமெரிக்க ஜனாதிபதியும் கேழ்த்தாத அற்புதமான பேச்சு அது" எனக் குறிப்பிட்டார்.

வடவியட்நாமிலிருந்து வந்த ஏராளமான ஆயுதங்கள்

கைப்பற்றப்பட்டு காட்சியில் வைக்கப்பட்டன

சைகோன், மார்ச் 17

கம்யூனிஸ்ட் நாடுகளில் உற்பத்திசெய்யப்பட்டு வடவியட்நாம் மூலம் வியட்காங் கொரில்லாக்களுக்கு அனுப்பப்பட்ட ஆயுதங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டன. தென்வியட்நாம் விமானங்களால் மூழ்டிக்கப்பட்ட கப்பலிலிருந்து இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கடுமையான வியட்காங் குட்டிற்கு மத்தியில் தென்வியட்நாம் துருப்புக்கள் வுங்ரோ குடாவில் கரையிறங்கி வியட்காங்கியரை அங்கிருந்து விரட்டினார்கள். அங்கு 5000 கீண்ட தூரம் நடந்து கழல்துப்பாக்கிகள், 10 லட்சம் முறை சுடக்கூடிய வெடிமருந்துபெட்டிகள், சோவியத் ரக டாங்கி எதிர்ப்பு ராக்கெட்டுகள், 75 மிலி மீட்டர் ரைபிள்கள், பெங்கலூ டார்ப்பிடோக்கள், எறிகுண்டுகள், வெடிமருந்துகள் ஆகியன சீன அடையாளங்களுடன் கைப்பற்றப்பட்டன.

இவற்றில் சீன. வடவியட்நாம் அடையாளங்கள்கொண்ட இதர பல பொருட்களும் இருந்தன. பலலட்சம் பேரைக் கொல்லக்கூடிய ஆயுதங்கள் இவை.

கடற்படைப் பயிற்சி

லண்டன், மார்ச் 17

மலாக்கா நீரிணையில் 8 விமானம் தாங்கிக் கப்பல்கள் உட்பட 40 கதிகமான காமன்வெல்த் யுத்தக்கப்பல்கள் பயிற்சிகளில் ஈடுபட்டதாயும், ஏவுகணைகளுடன் இப்பயிற்சி நடத்தப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

நாஸர் மீண்டும் ஜனாதிபதி

கெய்ரோ, மார்ச் 17

ஐக்கிய அராபியக் குடியரசின் ஜனாதிபதியாக திரு நாஸர் மீண்டும் ஆறு ஆண்டு காலத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். அவரைத் தவிர வேறு யாரும் இப்பதவிக்குப் போட்டியிடவில்லை.

மீண்டும் ஆட்சேபம்

பீகிங், மார்ச் 17

மாஸ்கோவில் அமெரிக்கத் தூதராலயத்துக்கு முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது சீன மாணவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டதாக சீனா மீண்டும் ஆட்சேபக்குறிப்பொன்றை ரஷ்யாவுக்கு அனுப்பியிருக்கிறது.

அராபிய மன்னர் பாகிஸ்தான் வருவார்

கராச்சி, மார்ச் 17

ஸவூதி அரேபிய மன்னர் பைஸால், அதிபர் அயூப் கானின் அழைப்பிற்கிணங்க

சம்யுக்த சோஷலிஸ்ட் அறிவிப்பு

திருவனந்தபுரம், மார்ச் 17

கேரளத்தில் காங்கிரஸ் இல்லாத அரசாங்கத்துக்கு சம்யுக்தசோஷலிஸ்ட் கட்சி ஆதரவளிக்குமென அதன் தலைவர் கூறினார். அரசாங்கம் அமைக்குமாறு முதலில் மார்க்ஸிய கம்யூனிஸ்டுகளைக் கவர்னர் அழைக்கவேண்டும் என்றும் அவர்களால் முடியாவிட்டால் அடுத்த பெரிய கட்சி அழைக்கப்படவேண்டும் என்றும் அவர் கோரியிருக்கிறார்.

நடிகர்-நடிகை கல்யாணம்

எல்பென், மார்ச் 17

நடிகை கிம்நொவாக்கும் பிரிட்டிஷ் நடிகர் யுச்சார்ட் ஜோன்ஸனும் இங்கு திருமணம் செய்து கொண்டார்கள்.

32 வயதான நடிகை விக்முதலாவது திருமணம் இது. ஆனால் 37 வயதான ஜோன்ஸன் முன்பு திருமணமானவர்.

வாசகம் கிடைத்தது

புதுடில்லி, மார்ச் 17

வியட்நாம் நெருக்கடி பற்றி பெல்கிரேடில் கூடிய மண்டல சார்பற்ற பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட வாசகம் டில்லிக்கு கிடைத்திருப்பதாயும் அரசாங்கம் அதைப் பரிசீலித்துக்கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

சாஸ்திரிக்கு சுகர்னோ அழைப்பு

ஜகார்த்தா, மார்ச் 17

பாண்டுங் மகாநாட்டின் 10 வது ஆண்டு நிறைவுகொண்டாட்டத்தில் கலந்துகொள்ள வருமாறு ஜனாதிபதி சுகர்னோ இந்தியப் பிரதமர் திரு சாஸ்திரிக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். அடுத்த 19ம் தேதி ஆரம்பமாகும் இக்கொண்டாட்டம் ஒருவாரம் நடைபெறும்.

மாணவர் காட்சி

புதுடில்லி, மார்ச் 17

பாரதத்திலுள்ள வெளிநாட்டு மாணவர்கள் வரைந்த ஓவியங்களும் பிடித்த புகைப்படங்களும் டில்லியில் காட்சிக்கு வைக்கப்பட்டன.

அர்ஜன்டைனாவைச் சேர்ந்த ஒரு மாணவி ஓவியத்தில் முதல் பரிசும் தாய்லாந்து மாணவி இரண்டாம் பரிசும் பெற்றனர்.

லண்டனில் ராதாகிருஷ்ணன்

லண்டன், மார்ச் 17

கண் சத்திர சிகிச்சையின் பொருட்டு இந்திய ஜனாதிபதி டாக்டர்ராதாகிருஷ்ணன் லண்டனுக்கு வந்துசேர்ந்தார்.

கோமுல்கா

வார்ஸா, மார்ச் 17

உலகில் புதிய அபாயத்தைத் தடுக்க வேண்டுமானால் வியட்நாமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறவேண்டும் என போலந்து கம்யூனிஸ்ட் தலைவர் திரு கோமுல்கா கூறியிருக்கிறார்.

மஞ்ச்ரேகர் ஓய்வு பெறுகிறார்

புதுடில்லி, மார்ச் 17

இந்தியர்களின் பிரபல டெஸ்ட் கிரிக்கெட் வீரரான வி. எல். மஞ்ச்ரேகர் ஓய்வு பெறுவதாக அறிவிக்கப்படுகிறது. 65 டெஸ்டுகளில் விளையாடிய அவர் முதல்தர விளையாட்டுக்களில் 9500 ரன்களும், டெஸ்டுகளில் 3209 ரன்களும் எடுத்தவர்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய முதுக் கொண்டிருக்கிறார்.

"தமிழரசுக் கட்சிதான் தமிழ் பேசும் மக்களின் ஒரேகட்சி"

நிந்தாவூர் சுயேச்சை அபேட்சகர் புகழ்மாலை

கல்முனை, புதன்

தமிழ்மொழி, குடியேற்றம், பிரஜா உரிமை ஆகியவைகட்காகன் எப்பொழுதும் நான் தமிழரசுக்கட்சியுடனேசேர்ந்து ஒத்துழைத்திருக்கிறேன். எனது தொகுதியையும் எனது மக்களையும் நான் எப்பொழுதும் காட்டிக்கொடுத்தது கிடையாது. இலங்கையிலே ஜனநாயக ஆட்சி நிலவ வேண்டும் என்ற காரணத்திலேதான் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்தேன். நான் எனது சமூகத்தை சிறிது கருதியிருந்தால் இன்று நான் வேட்பாளராக வரவேண்டிய நிலை வந்திருக்க முடியாது. ஆனால் ஒரு அரசாங்க கட்சி அங்கத்தவனாக இருந்து கொண்டு மக்களையும், எனது தொகுதியையும் காட்டிக் கொடுத்து என்றுமே அழியாத வடுவை நிந்தூர் தொகுதிக்கு பெற்றுத் தந்திருக்கலாம். ஆனால் அதை நான் செய்யவில்லை இனிமேல் செய்யப்போவதுமில்லை."

இவ்வாறு காரைதீவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடும் ஜனாப் எம். சி. மஜீத் கூறினார்.

கிழக்கு மாகாணத்தையே எல்லாத் தொகுதியிலும் தமிழரசுக்கட்சி, தமிழரசு வேட்பாளர்களை நிறுத்திய சமயம் நிந்தவூர் தொகுதியில் மட்டும் தமிழரசு அபேட்சகரை நிறுத்தாமல்விட்டதைப் பற்றி தமிழ் மக்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இலங்கையில் உள்ள தமிழர்களுக்காக பாராளுமன்றத்திலும், வெளியிலும் போராடிவரும் கட்சி தமிழரசுக்கட்சியே. தமிழர்களுக்கு தமிழ்மேகம் இனத்திற்கு ஒரு கட்சி இருக்குமாயின் அது தமிழரசு கட்சியே அப்படிப்பட்ட கட்சியின் தலைவராக்க திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மிகவும் பண்புள்ளவர். எங்களைப் பற்றி நன்கு புரிந்தவர். தமிழரசுக் கட்சியின் கொள்கை முழுவதையும் நான் ஏற்க விழைகிறேன். பாஷை, பிரஜா உரிமை, குடியேற்றம் ஆகியவைகளில் நான் எப்போதும் தமிழரசுக்கட்சிக்கும், தமிழ்மேகம் இனத்திற்கும் எதிராக நடந்து கிடையாது. ஆகவேதான் அவர்கள் எனக்கு எதிராக ஒரு தமிழரசு வேட்பாளரை இங்கு நிறுத்தவில்லை.

இந்தியா மீது குற்றச்சாட்டு

டாக்கா, மார்ச் 17

கூச்பிகாரிலே தஹகிராம் என்ற பகுதிதான் பகுதியிலிருந்து இந்தியத் துருப்புகள் வாபஸ் பெறவேண்டும் என கிழக்குப் பாகிஸ்தான் கவர்னர் கோரினார்.

மேற்கு நாடுகளின் ஆயுத உதவியே இந்தியாவுக்கு ஆக்கிரமிப்பு மனப்பான்மையை ஏற்படுத்தி இருக்கிறதென்று அவர் கூறினார். தினமும் 200 இந்திய ஊடுருவிகள் பாகிஸ்தானுக்கு விரட்டப்படுவதாயும் அவர் தெரிவித்தார்.

சில் ஹெட்டில் இந்தியத் துருப்புக்கள் அகாரணமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்வதாக கிழக்குப் பாகிஸ்தான் அரசாங்கம் ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது.

ஆனால் பாகிஸ்தானின் குற்றச்சாட்டை இந்தியா மறுத்திருக்கிறது.

முதல் திகதி முதல்...

புதுடில்லி, மார்ச் 17

அடுத்த முதல் திகதி முதல் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து பிரயாண தஸ்தாவேஜுகளுடன் வருபவர்கள் மட்டுமே இந்தியாவில் அனுமதிக்கப்படுவார்களென அறிவிக்கப்படுகிறது.

நாளைக்கு வாழ்த்து

புதுடில்லி, மார்ச் 17

மீண்டும் 5 ஆண்டுகளுக்கு ஐக்கிய அராபியக் குடியரசு ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் கலாநிதி டாக்டர் ஸகிர்ஹுஸைனுக்கு, பிரதமர் சாஸ்திரியும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருக்கின்றனர். —

தமிழ்நாட்டில் பஸ் போக்குவரத்து

சென்னை, மார்ச் 17

தமிழ்நாடு முழுவும் பஸ் போக்குவரத்தை அரசாங்க உடைமையாக்க இன்னும் சமயம் பாரியாக இல்லை என தொழில் மந்திரி திரு வெங்கடராமன் கூறினார். குறிப்பிட்ட சில நெடுந்தூரம் செல்லும் பஸ்களை அரசாங்கம் மேற்கொள்வதுதான் இப்போதைய கொள்கை என மந்திரி மேலும் கூறினார். —

2 பிரிட்டிஷார் கைது

லண்டன், மார்ச் 17

இரகசியத் தகவல்களை எதிரி நாடுகளுக்கு அறிவித்ததாக இரு பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள்கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சைப்ரஸில் மீண்டும் சூடு

நியூயோர்க், மார்ச் 17

பாதுகாப்புச் சபை இன்று சைப்ரஸ் பற்றிய விவாதத்தை மேற்கொண்டது. அங்கு மீண்டும் கிரேக்கர்களுக்கும், துருக்கியர்களுக்குமிடையே துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றதில் ஒருவர் மாண்டார். மற்றுமுவர் காயமடைந்தனர்.

ஜெர்மன் ஐக்கியம்

வாஷிங்டன், மார்ச் 17

அமெரிக்க, பிரிட்டிஷ், பிரெஞ்ச், மேற்கு ஜெர்மன் தூதர்கள் இங்கு ராஜாங்க இலாகாவில் சந்தித்து ஜெர்மன் ஐக்கியம் பற்றி விவாதித்தனர்.

மொராக்கோ முறிக்காது

ரபாட், மார்ச் 17

மொராக்கோ மேற்கு ஜெர்மனியுடன் ராஜதந்திர உறவை முறித்துக்கொள்ளாது என அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் அங்கீகாரம்

டெல்அவிவ், மார்ச் 17

மேற்கு ஜெர்மனி இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவை மேற்கொள்ளவிருப்பம் தெரிவித்திருப்பதை இஸ்ரேல் பார்லிமெண்ட் அங்கீகரித்திருக்கிறது. 66 அங்கத்தினர்கள் ஆதரித்தும், 29 அங்கத்தினர்கள் எதிராகவும் வாக்களித்தனர்.

பிரயாணிகள் மடத்தின் அவல நிலை

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவு துறைமுகத்தில் உள்ள பிரயாணிகள் தங்கும் மடம் அண்மையில் வீசிய சூறாவளியால் அதன் கூரையும் தூண்களும் சேதமடைந்தன. இதுகாலவரைக்கும் இம் மடம் மட்டுமே பிரயாணிகள் தங்கக் கூடிய வசதியுடன் துறைமுகத்தில் இருந்தது. பொதுமக்கள் தங்கிச் செல்ல வேறு இடம் இல்லாது மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இம்மடம் பொதுமராமத்து இலாகாவுக்கு உரியதென்பது குறிப்பிடத் தக்கது.

காலி பௌத்த ஆலயம் தாக்கப்பட்டது?

காலி, புதன்

சலப்பு அரசாங்கத்துக்கு விரோதமானவர்கள் மீது 8 பலாத்காரச்சம்பவங்கள் பிரயோகிக்கப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது.

காலி கோட்டையிலுள்ள ஸ்ரீ சுதர்மாலை விகாரையை சிலர் தாக்கியதால் ஆலயத்தின் முன் கதவுகள் சேதமடைந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னேற்றவாதிகள் எனக் கூறிக்கொள்ளும் நாலந்துபேர் ஒரு காரில் வந்து பின், சாராயப்போத்தல் ஒன்றைத்திறந்து வேறுசிலருடன் பங்கிட்டுக் கொண்டனராம். அவர்கள் முன்னேற்றக் கொள்கையுடையவர்களா என அவர்களிடம் கேட்டபின் ஆலயத்திலுள்ள பிக்குகளைத் துஷித்து ஆலயத்தைத் தாக்கினர் எனக் கூறப்படுகிறது.

எல்பிட்டியாவுக்கருகில் ஒரு கூட்டத்தினர் ஐக்கிய தேசியக்கட்சிக் காரியாலயத்தைத் தாக்கி அதைச் சேதப்படுத்தினர். அதேநேரம் மீது கற்கள் வீசப்பட்டன என்றும், ஒரு நகைக்கடை சேதப்படுத்தப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது. ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அக்குறணையில் ஐ தே கட்சிக்குச் சொந்தமான ஒரு பிரசாரவான் தாக்கப்பட்டு ஒலி பெருக்கி பிடுங்கப்பட்டதாம்.

பொலிசார் பலரைக் கைது செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

—

"விஞ்ஞான ஆசிரியர்கள் வேண்டும்"

நெடுந்தீவு, புதன்

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் திரு. சு. மகேந்திரர் தலைமையில் கூடியபொழுது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

விஞ்ஞான பாடங்கள் கற்க பல மாணவர்களும் அதற்கு வேண்டிய விஞ்ஞான ஆய்வுகூடம் இருந்தும் விஞ்ஞான பாடங்களை கற்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லாததால் விஞ்ஞான பாடங்களை கற்பிக்கக்கூடிய விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களையும் கணிதம் கற்பிக்கக்கூடிய கணித ஆசிரியர்களையும் இவ்விதியலைத்துக்கு தந்துதவும்படி இச்சங்கம் கோருகிறது.

கடற்றொழிலில் மிகுந்த ஆர்வமுள்ள இப்பாடசாலை மாணவர்களுக்கு விரைவில் ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்கமாறு இச்சங்கம் கல்வி அதிகாரிகளை கேட்டுக்கொள்கிறது.

மேற்படி இரு பிரரேரணையும் கொண்ட ஒரு மகஜர் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

—

அங்குரார்ப்பணம்

காங்கேசன்துறை, புதன்

காங்கேசன்துறையில் நேஷனல் விளையாட்டுக்கழகத்தை மேற்று பிற்பகல் 5 மணிக்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ரி ஏ பேரி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இக்கழகத்தின் முதலாவது கைப்பந்தாட்டப் போட்டி அரியலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தற்கும் வதிரி ரைஸ்ல விளையாட்டுக் கழகத்தற்கிடையே நடைபெற்றது, இப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றிட்டியது

கச்சதீவில் பெருநாள்

நெடுந்தீவு புதன்

நெடுந்தீவுக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையே காணப்படும் கச்சதீவில் வழமைபோல இம்முறையும் அர்ச் அந்தோனியார் தேவாலயத்தில் இம்மாதம் 28 ம் திகதி பெருநாள் நடைபெறும். இதற்கு வழமைபோல் குடிதண்ணீர் வசதி, வைத்திய உதவி ஆகும் பாதுகாப்பு யாவும் ஏற்படுத்தப்படும் என்றுகூறப்படுகிறது.

REGAL JAFFNA
NOW SHOWING
MARK RICHMAN
in
The Evils of Narcotics
(Murder Men) (Adults only)

"உரிமைக்காகப் போராடும் கட்சி"

பனை, புதன்

"இன்று தமிழ்மொழி உரிமைக்காக தமிழ்மக்களுக்காக, தமிழ் நாடாகிய ஈழநாட்டுக்காக உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்து அரும்பாடுபட்டுழைப்பதே எமது தமிழரசுக்கட்சியின் முக்கிய இலட்சியமாகும். சீர்குலைந்து கொண்டிருக்கும் தமிழுரிமையை கட்டிக்காப்பதற்காகவே யான் இன்று சிலிஒச்சித் தொகுதியாகிய இத்தொகுதியில் வேட்பாளராக வந்துள்ளேன் இன்று தமிழன் தமிழனைத் தன்மானத்துடன் தலைநிமிர்ந்து வாழவைத்தது எமது தமிழரசுக்கட்சியேயாகும். இன்று எமது அரசியல் கூப்பனில் தமிழ்மொழியும் இடம்பெறவைத்த பெருமை எமது தமிழரசுக் கட்சியைச் சார்ந்ததாகும். 1956-ம் ஆண்டு இனமொழி உணர்ச்சியில் சிங்கள மக்களின் தாகுதலுக்குட்பாகாமல் தென்இலங்கை தமிழ்மக்களை மீண்டும் தென்இலங்கையில் தலைநிமிர்ந்து வாழ வழி செய்ததும் எமது கட்சியேயாகும்"

இவ்வாறு பனை இரட்டைக் கேணி அம்பாள் கோவில் மைதானத்தில் சிலிஒச்சித் தொகுதி தமிழரசுக்கட்சி வேட்பாளர் பண்டிதர் க. பொ. இரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய பண்டிதர் திரு. க. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

எமது மாற்றுக்கட்சியினர் "தமிழரசுக்கட்சி என்ன செய்துள்ளது" என்று கேட்கிறார்களே! இவர்கள் சாதித்ததை எண்ணிப்பார்ப்பது அவர்கட்கு புரிபவில்லைபோலும். இன்று தமிழன் தன்மானத்துடன் பண்பட்ட மனிதனாக பதவிக்கவைத்தது யார்! சிங்கள மசோதாவால் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையை சீர்படுத்தி வைத்தவர் யார்! இதுபோன்ற எத்தனையோ பல உதவிகளை இத்தமிழரசுக்கட்சி தமிழ்மக்கள் மத்தியிலே செய்துள்ளது.

இன்று தமிழன் உரிமைகளை முறைப்படி பெற போராடி வெற்றியீட்டத்தக்க ஏமத்தட்சியாகும். தமிழர் ஆதரவின்றி சிங்களவர் ஆட்சிபீடம் அமைப்பது முடியாத காரியம் என்பதை ஒவ்வொரு தமிழ்மகனும் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம். நாம் நினைத்தால் அரசாங்கத்தை வீழ்த்தவோ அன்றி ஆட்சி கட்டத்தவோ வைக்கமுடியும்

இக்கூட்டத்திற்கு திரு. பொ. திருஞானம் தலைமை வகித்தார். மற்றும் திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. இ. நடேசுந்திரம், திரு. நர்மலிங்கம், திரு வ. ந வேரத்தினம் திரு. சீ. ஏச். எல், நாதன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினார்கள்.

—

சிறுகதைப் போட்டியில் வெள்ளிப் பதக்கம்

உடுப்பிட்டி, புதன்

1964-ம் ஆண்டு சாகித்திய மண்டலம் நடாத்திய சிறுகதைப் போட்டியிலும், 1963-ம் ஆண்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியிலும் பரிசில்கள் பெற்றவர்.

"தொழில் வாய்ப்புக்கள் மூலம் தமிழர் பிரச்னை தீரும்"

ஆனைக்கோட்டையில் டொக்டர் சா

யாழ்ப்பாணம், புதன்

"தமிழ் மக்களின் பிரச்னைகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களைத் தொழிலியலமாக்குவதன்மூலம் தான் தீர்க்கமுடியும். தமிழ் மக்களுக்கு இதுவரை காலமும் செய்யப்பட்டிருக்கும் சட்ட அநீதிகளும் தொல்லைகளும் வேலையில்லாத் திண்டாட்டமே அடிப்படைக் காரணமாகும். வேலையில்லாத் திண்டாட்டத்தை இந்நாட்டைவிட்டு விரட்டுவதன்மூலம் தமிழ்மக்களுக்கு விமோசனப் பாதையை ஏற்படுத்த முடியும். ஆகவே தமிழ் மக்களின் எதிர்கால நல்வாழ்வு நாட்டைத் தொழிலியலமாக்குவதில்தான் தங்கியிருக்கிறது இதற்காகக் கூட்டரசாங்கம் தன்னுயிரன்றவரை உழைக்கும்"

இவ்வாறு சொல்லிட்டர் டொக்டர் சா ஆனைக்கோட்டை முத்தமிழ் மகாநாட்டு மேடையில் நடைபெற்ற பேரவை பிரசார கூட்டமொன்றில் கேட்கையில் கூறினார்.

ஐக்கிய இடதுசாரி வேட்பாளர் திரு. பொ. நாகலிங்கத்தை ஆதரித்து நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு சா மேலும் கூறியதாவது:-

"தமிழ் மொழி அழிந்துவிட்டதென்றும், தமிழ் கலாசாரம் பாதிக்கப்பட்டுவிட்டதென்றும் இடதுசாரிகள் தமிழர்களுக்குத் துரோகம் இழைத்தவர்கள் என்றும் சிலர் இல்லாததும் பொல்லாததும் சொல்லிவருகிறார்கள். இப்படியான பொய்களை கேட்டு தமிழ் மக்கள் ஏமாந்துவிடக்கூடாது. சமசமாஜ கட்சி கூட்டரசாங்கத்தில் சேரும்போது 14 அம்சத்திட்டத்தில்தான் சேர்ந்தது. அதில் உள்ள இரண்டு திட்டங்கள் தமிழ் மக்களின் சமீப்ச வாழ்வை ஏற்படுத்தக் கூடியனவாகும். ஒன்று பிரதேச சபைகளை அமைத்து தமிழர்கள் வாழும் இடங்களில் தமிழை நிர்வாகமொழியாக்குவது, அடுத்தது தமிழ் மக்களின் நியாயமான அரசுமொழி உபயோகச் சட்டத்தை அமுலபடுத்துவது, இவற்றை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திருச்செல்வம் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இடதுசாரி இயக்கம் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்யவில்லையென் றற்கு இதைவிட வேறு சான்றுகளே தேவையில்லை.

திரு. என். பி. தர்மலிங்கம் பேசுகையில், 1958 ம் ஆண்டு இந்த நாட்டிலே ஏற்பட்ட இனக்கலவரத்துக்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்களை ஏரிக்கரைச் சிங்களத் தினசரிகளென்றும், அப்படிப்பட்ட பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதற்கு முழு எதிர்ப்பைத் தமிழரசுக்கட்சி காட்டியது இந்த நாட்டுத் தமிழ்ப் பேசும் மக்களை குழிதோண்டிப் புதைப்பதுபோன்றதென்றும் கூறினார்.

காங்கேசன்துறை வேட்பாளர் திரு. வைகுந்தவாசன் உட்பட வேறு பலரும் பேசினர்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

2- வது மாதம்
கிங்ஸ்லி
(கொழும்பு)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 9-30.

ஜெமினி கணேசன்
சாவித்திரி
மற்றும் பலர் நடிக்கும்
கற்பகம்

மீனாக்ஷி
(வெள்ளவத்தை)
வெம்பிளி
(கண்டி)

குடுகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!
இதை அளிக்கிறது
நேத்திராலோகதைலம்

இது பித்தம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லா வித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடனும் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-65.
வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.

டப்ளியூ. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்,
161, நோர்த் ரோடு,
கொழும்பு-11.

'நகுவளிப் பிரசாரம்'

பருத்தித்துறை, புதன்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பருத்தித்துறைத் தொகுதி வெட்பாளர் திரு. க. துரைரத்தினத்தை ஆதரிக்குமுகமாக இன்று காலையிலிருந்து மாலை வரை வட்மராட்சி கிழக்கில் 14 பிரசாரக்கூட்டங்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

ஆனியவனை, கொடுக்குளாய், உடுத்துறை, மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று, மாமுனை, நாகர்கோவில், அம்பன் ஆகிய இடங்களில் இதுவரை நடைபெற்ற கூட்டங்களில் வட்டுக்கோட்டை வேட்பாளர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். நகர மேயர் திரு. சி. மகாதேவா, வழக்கறிஞர் திரு. ஆலாலசுந்தரம், செல்வி கலைமகள் சதாசிவடி, செல்வி கனிவி சுந்தரமூர்த்தி, திரு. யேக்கப், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் முதலான பலர் சொற்பெருக்காற்றினர். இக்கூட்டங்களில் திரு. துரைரத்தினம் பேசுகையில் கடந்த காலத்தில் தாம் செய்த சேவைகள் பற்றித் தெரிவித்ததுடன் கடந்த நகுவளியின்போது கஷ்ட, நஷ்டங்களுக்குள்ளான கடற் தொழிலாளர்களின் பேரில் தாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை தனதாவேஜாகளுட்னி எடுத்துக் காட்டினார்.

பகல் வேளையாக இருந்தும் பெண்கள் உட்பட பெருந்தொகையான மக்கள் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

ஆசிரியருக்குக் கடிதம்

இனி என்று காண்போம்?

நல்லூர் கந்தசுவாமிகோயிற் காவலராகச் செவ்வனே கடமையாற்றி வந்து, சைவப் பெருமக்களின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றவராகிய ஸ்ரீ ஷண்முகதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள் ஆண்டுதோறும் பங்குனி உத்திர தினத்தன்று காலையில் பலபக்தியுடன் தேனினி மொழியாள் மீனலோசனிச் செல்வியென்றழைக்கப்படும் அருந்தவப் புதல்வி பாற்செம்புஏந்திப்பின்செல்லபக்தர் குழாம் புடைசூழ்ந்து பஜனை செய்து கொண்டு செல்ல செந்நிறப்பட்டுடுத்தி தலையமொட்டையடித்து (வழித்து) கௌரிசங்கர் மார்பில் திகழ

"நல்ல மனசரெடுத்து நல்லூரை நாடிப் போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்

பேச்சுப் போட்டி முடிவுகள்

பருத்தித்துறை, புதன்

வடமராட்சி ஆங்கில ஆசிரியர் சங்கத்தினால் கல்லூரிகட்கிடையே வருடாந்த பேச்சு வன்மைப் போட்டிகள் பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் வித்தியாசாலை மண்டபத்தில் நடாத்தப்பட்டன.

போட்டிகளில் முதல் இடம் பெற்ற பாடசாலைகள்;-

ஆங்கிலப் பேச்சு ஆண்கள்

மேற்பிரிவு- யே. தம்பாப்பிள்ளை (ஹாட்லிக் கல்லூரி)

மத்திய பிரிவு- எஸ். சாந்திகுமார் (ஹாட்லிக் கல்லூரி)

கீழ்ப்பிரிவு- சி. யே. மனுவற்பிள்ளை (ஹாட்லிக் கல்லூரி)

பெண்கள்

மேற்பிரிவு- குணரூபினி குணநாயகம் (மெதடிஸ்த மகளிர் கல்லூரி)

மத்திய பிரிவு- லலிதா தம்பியப்பா உடுப்பிட்டி (மகளிர் கல்லூரி)

கீழ்ப்பிரிவு- அனுசூயா பரமகுரு (மெதடிஸ்த மகளிர் கல்லூரி)

தமிழ்; ஆண்கள்

மேற்பிரிவு- தில்லைநடராசா க. உடுப்பிட்டி (ஆண்கள் கல்லூரி)

மத்திய பிரிவு- எஸ். ஜெயசீலன் உடுப்பிட்டி (ஆண்கள் கல்லூரி)

கீழ்ப்பிரிவு- ரி. டி. சத்தியகிரி (ஹாட்லிக் கல்லூரி)

பெண்கள்

மேற்பிரிவு- இராசேஸ்வரி இராசையா (மெதடிஸ்த மகளிர் கல்லூரி)

மத்திய பிரிவு- விஜயலட்கமி சற்குணராஜன் உடுப்பிட்டி (மகளிர் கல்லூரி)

கீழ்ப்பிரிவு- வரதலட்கமி ஏகாரம் உடுப்பிட்டி (மகளிர் கல்லூரி)

இப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு சங்கத் தலைவர் திரு. எஸ். சச்சிதானந்தம் சான்றிதழ்களை வழங்கினார்.

தேறிவிடும் சிந்தை தெளி" என்ற யோகீஸ்வரரின் நற்சிந்தனையை செயித்தவண்ணம் காவடி எடுக்கும் அற்புதக் காட்சியை பக்திப் பெருவெள்ள அலைகிளவதை இனி நாம் என்று காண்போம்.

-குல. சபாநாதன்

"என்னை அனுப்ப விரும்பாவிடில்...."

கிளிநொச்சி, புதன்

"நான் 1956-ம் ஆண்டு தொடக்கம் தமிழரசுக் கட்சியில் பணியாற்றி வந்தேன். கட்சியினால் நடாத்தப்பட்ட எல்லா இயக்கங்களிலும் கூடிய பங்கு கொண்டேன். ஆனால் நான் செய்த பணிவிடைகளுக்கு ஏற்ற பயனைப் பொதுமக்களுக்கு எடுத்துக் காட்ட எண்ணக் கிளிநொச்சித் தொகுதிக்கு ஓர் அபேட்சகனாக நிறுத்த தமிழரசுக்கட்சியின் தலைமைப்பீடம் தவறிவிட்டது. எனவேதான் நான் இத்தொகுதியில் ஒரு கயேச்சை அபேட்சகனாகப் போட்டியிட முன்வந்துள்ளேன்" இவ்வாறு கிளிநொச்சித் தொகுதியில் கயேச்சை அபேட்சகராகப் போட்டியிடும் திரு. க. செல்வநாயகம் தன்னை ஆதரித்து ஜெயந்திநகரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார் அவர் மேலும் பேசுகையில், எனது உடல் பொருள் ஆவி அத்தனையும் தமிழ்மக்களின் உரிமைக்காக தியாகம் செய்வேன். என்னை அனுப்ப விரும்பவில்லையேல் எனக்கு அளிக்கும் வாக்குகளை தயது செய்து தமிழரசுக் கட்சிக்கே போடவும் என்றார்.

கூட்டத்திற்கு திரு. ச. ஜயம்பிள்ளை தலைமை வகித்தார். மற்றும் பலரும் பேசினர்.

யாழ். மத்தியகல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ் இந்துக்கல்லூரிக்கும் இடையில் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி இன்னிங்ஸ வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துக்கல்லூரி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 144 ஓட்டங்களை எடுத்தது. யாழ் மத்திய கல்லூரி தனது முதல் இன்னிங்சில் 5 விக்கட் நஷ்டத்துக்கு 279 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. சச்சிதானந்தன், மனோகரன் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 88, 88 ஓட்டங்களை எடுத்தனர். யாழ் இந்துக்கல்லூரி இரண்டாவது இன்னிங்சில் மொத்தம் 89 ஓட்டங்களைப் பெற்றது. ஆட்ட இறுதியில் அம்பலவாணர் வீழ்த்திய விக்கட்டுகளின் பாராட்டுதலைப் பெற்றது,

மத்தியஸ்தர்களாக சேவியர், யோகரத்தினம் கடமையாற்றினர்,

எம். ஈ. பி. வின்கொள்கை பற்றி அபேட்சகர்

வவுனியா, புதன்

அதி வணக்கத்துக்குரிய பனிப்பத்தான தர்மரத்தின தேரோ அவர்களது தலைமையில் பாவற்குளக் குடியேற்றத் திட்டத்தில் வவுனியாத் தொகுதியில் மகாஜன எக்ஸ்பெரமுனைக் கட்சி சார்பாக வேட்பாளராக முன்வந்துள்ள திரு. டபிள்யு. எஸ். பெரேராவினது வேட்பை ஆதரித்து ஒரு தேர்தல் பிரசாரக்கூட்டம் நடந்தேறியது.

"இத்தேர்தலில் வெல்லுவதையும் தோற்பதையும் பற்றி நான் கவலைப்படவில்லை. கட்சித் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தனா எனக்குக் கட்டளையிட்ட பிரகாரம் இத்தொகுதியில் மகாஜன எக்ஸத் பெரமுனையின் கொள்கையை இத்தொகுதியில் அமுலநடத்தி இங்கு சிங்களம்-தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நட்புறவை வளர்ப்பதும் இத்தொகுதியில் வறுமைப் பிணியைத் தீர்ப்பதும் விசேஷமாக விவசாயிகள்-தொழிலாளர்களது கஷ்டத்துக்காக உழைப்பதும் முன்னேற்ற வேலைகளில் ஈடுபடுவதும் எமது இலட்சியம்." என்று அவர் கூறினார்.

"ராஜசிங்கமன்னனுக்குப் பின் டாக்டர் பெரேராவின் சேவை" பிக்கு பாராட்டு

மிரிகாமம், புதன்

"பிரதம மந்திரி சிறீமாவுக்கு விஜயம் செய்தபோது சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டார். சிறீமாவைப் போன்ற மகத்தான வரவேற்பு அவருக்கு உலகில் எங்கும் கிடைக்கவில்லை. இதுவரை இந்த நாட்டில் பிரதம மந்திரி பதவி வகித்தவர்களிலேயே ஸ்ரீமதி பண்டாரநாயகாதான் வெற்றிகரமாகசெயலாற்றியிருக்கிறார்" என வன மடகொடை சுகனுதிஸ்ஸ தேரோ ஒரு கூட்டத்தில் பேசிய போது குறிப்பிட்டார்.

'பிரதமருக்கு பார்லிமெண்டில் மற்றோர் பெண்ணின் உதவி தேவைப்படுகிறது எனவே ஸ்ரீமதி சிவா ஒபயசேகரா பார்லிமெண்டுக்கு அனுப்பப்படவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

யட்டிதாரிய ஏஜாபுத்திதேரோ பேசுகையில் எல்லா வங்குரோத்து அரசியல் கட்சிகளும் தேர்தலில் தோற்கடிக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

"விக்ரம ராஜசிங்க மன்னனுக்கு பின் டாக்டர் என். எம். பெரேராதான் போயா பௌர்ணமியை அரசாங்க விடுமுறையாக்கினார். ஆனால் பிற்போக்குவாதிகள் அவரை மதவிரோதி என அழைக்கின்றார்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

"முன்னேற்றத்துக்காக உழைத்தேன்"

நீர்வேலி, புதன்

"தமிழ் பேசும் இனத்தின் கல்வியின் முன்னேற்றத்திற்காக நான் அயராது உழைத்திருக்கின்றேன்" என்று கோப்பாய் முன்னாள் எம். பி.யும் தற்போதைய கயேட்சை அபேட்சகருமான திரு. மு. பாலசுந்தரம், நீர்வேலியில் திரு. முருகேசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் குறிப்பிட்டார்.

"எனது தொகுதிகளில் உள்ள பாடசாலைகளினதும் கல்லூரிகளினதும் தரத்தை உயர்த்தியதுடன் ஆங்கில கல்வி, விஞ்ஞானம், தொழில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளேன். மேலும் எனது தொகுதியில் எதாவது ஒரு பாடசாலையையும் மூடுவதற்கு இடம் கொடுக்காத அதே சமயத்தில் பல புதிய பாடசாலைகளை ஆரம்பித்துள்ளேன்" என்று திரு. பாலசுந்தரம் கூறினார்.

திரு. க. கந்தையா, பா. யோகசுந்தரம், அ. சுவாமிநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

ஜோதிஷமும் மாந்திரீகமும்

பாலபிணிதோஷ நிவாரணிக்கு பிணிநூல் பெறலாம். இடம்: ஜோதிடக் கலையகத்தாவும், 222, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1801

Delft General Services Co-operative Society Ltd.
Post of Accountant

Applications are invited for the above post, with full particulars as to name, address, age, educational qualification (with copy of certificates), experience, and any other special qualification, to reach the under-signed before 25-3-65

Salary Scale:- All inclusive salary of Rs. 200/= —10×15—350/=

Educational Qualifications:-
(a) G.C.E. (Ordinary Level) with English and Mathametics or higher qualifications.
(b) Preference will be given to any recognised qualification in accountancy.

R. SINNATHAMBY B.A.
President
1679

வாரி விளம்பரம்

18-3-65 வியாழக்கிழமை பகல் 10-35 மணிக்குமேல் 11-15 மணிக்குள் வரும் சுபவேளையில் எனது மகன் இராமச்சந்திரனுக்கு வல்லிபுரகலாமிசந்நிதானத்தில் மந்திரோபதேசமும், பூணூல் தரித்தலும் நிகழ விருப்பதால் எனதன்பர்கள் அனைவரையும் சமுகமளிக்கும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிக்கு, உங்கள் நல்வரவை எதிர்பார்க்கும் ச. கணபதிசாமிகுருக்கள், வல்லிபுர ஆலயம், துன்னாலை வடக்கு, கரவெட்டி. 1781

தேவை

பண வசூலிப்பாளர் (Collection officer) உடனே தேவை. நம்பிக்கையும் நேர்மையுமுள்ளவராக இருத்தல் வேண்டும். ஆரம்ப சம்பளம் ரூபா 100-00 கொடுக்கப்படும். டிபோசிட் பணம் ரூபா 750-00 உடனே கட்டவேண்டும். தகுதியானவர் நற்சான்றுப் பத்திரங்களுடனும் டிபோசிட் பணத்துடனும் நேரில் வரவும். உரிமையாளர், தமிழ்நேசன் பத்திரிகை அலுவலகம், 30, பேங்ஷால்வீதி, யாழ்ப்பாணம். 1799

அலுமினியப் பாத்திரவேலை செய்யக்கூடிய ஸ்பின்னரும், தகடுவிடக்கூடியவரும் தேவை, எவர்சில்வர் மாளிகை, 241, கே, கே, எஸ். வீதி. யாழ்ப்பாணம். 1797

விற்பனைக்கு

எங்கள் தயாரிப்பிலுள்ள "டோச்" மார்க் அலுமினியப் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1748

புதிய சிங்கர் கபிநெற் தையல் மெசின் காலால் இயக்கக்கூடியது, மூன்று லாச்சிகள் கொண்டது. விரும்புவோர் தொடர்புகொள்ளவும். சி. தெ. மூர்த்தி, கிராமசபை, நல்லூர், திருநெல்வேலி, 1804

வாடகைக்கு

கல்தேர் பாவனைக்கோ, குடியிருப்புக்கோ தகுந்த சகலவித வசதிகளுடன் இரு வீடுகள் 34, 6-ம் குறுக்குவீதி, யாழ்ப்பாணத்தில் உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும். 1800

தொலைவு, திரிபு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் கிரிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொலைவுக்கு 10 நாள் மருந்து. 12-00 திரிபுக்கு 10 நாள் மருந்து 10-00.

உவத்திய பரிபூரணானந்த கைலையபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

சிகை அலங்காரப் பயிற்சி

"கிளிநொச்சியில் ஒரு வருடம் சிகை அலங்காரப் பயிற்சி பெறவிரும்பும் 10 வயதுக்கு மேற்பட்ட 19 வயது வரை உள்ளவர்-மவகுப்பாவது படித்த இளைஞர்கள் விண்ணப்பிக்கவும். பயிற்சிக்கு வண்டிய வசதிகள் உண்டு"

பி/o மானேஜர், 'காந்தி நிலையம்' உருத்திரபுரம். 1805

தேர்தலுக்கு முன் தேநீர்க்கடைப் பிரவேசம்!

வேட்பாளர்களைக் கொண்டு செயலபடுத்தத் தீர்மானம்

பகுத்தித்துறை, செவ். கெல்லியடியிலுள்ள தேநீர்க் கடைகள், போசனசாலைகள் ஆகியவைகளை தேர்தல் தினத்துக்கு முன்பதாக பார்லிமெண்ட் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களைக் கொண்டு சகல மக்களுக்கும் திறந்துவிட நடவடிக்கை எடுப்பதென இன்று காலை வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சமூக உரிமைச் சீர்திருத்த வட்டமேசை மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

கெல்லியடி பட்டினசபைத் தலைவர் திரு. வி. எஸ். பொன்னையா தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் இது சம்பந்தமாக கடை உரிமையாளர்களைச் சந்தித்துப் பேசவதற்கு உடுப்பிட்டி வேட்பாளர்களான திரு. மு. சிவசிதம்பரம், ஆர். ஆர். தர்மரத்தினம், திரு. கே. ஜெயக்கொடி, திரு. வி. எஸ். பொன்னையா ஆகியோருடன் சங்கச் செயலாளர் திரு. செல்வராசாவும் காலை மாலை செல்லவேண்டுமென முடிவு செய்யப்பட்டது.

நான்கு மணிநேரம் நடைபெற்ற இம்மகாநாட்டில் பகுத்தித்துறைத்தொகுதி வேட்பாளர்கள் திரு. க. துரைரத்தினம், திரு. மோதிலால்நேரு, காங்கேசன்துறை அபேட்சகர் திரு. சீவிவாசகம், திரு. ஏ. எம். செல்லத்துரை, திரு. க. முருகேசு, கவிஞர் மு. செல்லையா ஆகியோரும் கருத்துத் தெரிவித்தனர்.

சான்திரி மந்திரிசபை

அவநம்பிக்கை பிரேரணையை லோகசபை நிராகரித்தது

புதுடில்லி, மார்ச். 16

சான்திரி மந்திரிசபை மீது அவநம்பிக்கை தெரிவித்து கேற்று முன்தினம் இந்திய லோகசபையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை லோகசபை இன்று நிராகரித்தது.

அவநம்பிக்கை பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொண்ட பின்னர் இன்று வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பொழுது, பிரேரணையை ஆதரித்து 44 பேரும், எதிர்த்து 316 பேரும் வாக்களித்திருந்தனர். இந்தப் பிரேரணையை சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி கொண்டுவந்திருந்தது.

இன்றைய விவாதத்தில் திரு. ஆச்சார்யகிருபளானி (சுயேச்சை) பேசுகையில் சகல விஷயங்களிலும் அரசாங்கம் தாமதித்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்று கூறினார்.

டாக்டர் ராம்மனோகர் லோஹியா (எஸ். எஸ். பி) பேசுகையில், சொத்து சுகவாழ்வு ஆசை பெருகப் பெருக வஞ்சமும் வழலும் நாட்டில் அதிகரித்துக்கொண்டு வருகின்றன என்று கூறினார்.

வஞ்சம், வழல சம்பந்தமாக ஒரிஸாவில் நீதி விசாரணைக்கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டுமென்று சுதந்திரா அங்கத்தவர் ஒருவர் கூறினார்.

ஒரிஸாவில் விசாரணைக் கமிஷன் நியமிப்பதால் நல்லதை ஏற்படாது என்று காங்கிரஸ் அங்கத்தவரொருவர் தெரிவித்தார்.

அவநம்பிக்கை பிரேரணைக்கு பிரதமர் சான்திரி பதிலளித்துப் பேசுகையில், அரசாங்கத்தின் கொள்கை எதுவும் மாறவில்லை என்றும், ஒரிஸாவில் லஞ்சம் பற்றி சம்பந்தப்பட்ட தலைவர்களிடம் விசாரிக்கப்பட்டதென்றும் அரசாங்கம் சகல விஷயத்திலும் கவனமாக இருக்கிறதென்றும் கூறினார்.

ஒரிஸாவில் விசாரணைக் கமிஷன் நியமிக்கத்தேவையில்லை என்றும் பிரதமர் சான்திரி குறிப்பிட்டார்.

பஸ் சேதம் 1,61,000 ரூபா!

சென்னை, மார்ச் 16

அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளின் விளைவாக போக்குவரத்து பஸ்களுக்கு ஒருலட்சத்து 61,000 ரூபாய் சேதமேற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரிசி மட்டுமே இங்கு கிடைக்கும்?

யாழ்ப்பாணம், புதன்

பிச்சேட்டிலுள்ள ஒரு பலநோக்கு கூட்டுறவு பண்டகசாலையில் கடந்த இரண்டு மாதங்களாக அரிசி மட்டுமே விற்பனையாகின்றது. இந்தக் குறிப்பிட்ட சங்கம் கடந்த இரண்டு மாதங்களாக மிளகாய், தீப்பெட்டி, புளி, மாசி, பட்டினி எதையும் விற்பனை செய்யவில்லை என்றும் தெரிய வருகிறது. இது விஷயமாக அதிருப்தியடைந்த சில பொது மக்கள் கூட்டுறவு அதிகாரிக்கு புகார் செய்துள்ளனர் என்று தெரியவருகிறது.

தடுப்புக்காவலில் 91 கம்யூனிஸ்டுகள்

சென்னை, மார்ச் 16

இந்திய பாதுகாபபுச் சட்டத்தின் கீழ்; தமிழ்நாட்டில் 91 இடதுசாரி கம்யூனிஸடுகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்று ராஜ்ய கீழ் சட்டசபையில் தமிழ்நாட்டு முதன்மந்திரி பக்தவத்சலம் இன்று தெரிவித்தார். விடுதலை கோரி இவர்களில் பலர் விண்ணப்பித்தனர் என்றும் மூவர் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை - இந்தியர் சங்க புதிய தலைவர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை - இந்தியர் சங்கத்தின் புதியதலைவராக திரு கே. வெங்கடசாமி நாயுடு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இச்சங்கத்தின் அங்கத்தவர்களிடையே ஏற்பட்ட சில தகராறுகளைத் தொடர்ந்து புதிய தலைவர் தேர்தல் நேற்று மாலை திரு. எல். நாகராஜா, எம். எம். சி., புரக்டர் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. திரு. வெங்கடசாமி நாயுடுவுடன் போட்டியிட்ட திரு எஸ். ராதாகிருஷ்ணனுக்கு 152 வாக்குகளும் திரு. வெங்கடசாமி நாயுடுவுக்கு 220 வாக்குகளும் கிடைத்திருந்தன.

ஐயாறன்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் வழமைபோல் திறந்து நடப்பதாயும் ஓர் அன்பர் தெரிவித்தார். பழைய மனஸ்தாபங்களை எல்லாம் மறந்து மற்றவர்களை மன்னித்து, இருகட்சியினரும், சங்கத்தின் நன்மையையே முக்கியமாகக் கருதி இனி ஒத்துழைத்து தொண்டாற்றுவதில்தான் இச்சங்கத்தின் வெற்றியும் அடங்கி இருக்கும்.

* * *

கூற்றுவன்காண் கூற்று உனைக் குமைத்த கோன்காண் காண் குவலயன்காண் குவலயத்தின் கீரானன்காண், காற்றவன் காண் கனலவன் காண்கனிக்கும் மின்காண் கனபவளச் செம்மேனி கலந்த தென்னை, கீற்றவன்காண் நில வூருஞ் சென்னியன்காண் கிறையார்ந்த புனற்சங்கை நிமிர்சடைமேல், ஏற்றவன்காண் எழிலாரும் பொழிவார் கச்சிஏகம் பன்காண் அவனென் எண்ணத்தானே.

— அப்பர் அடிகள்.

"நாங்கள் மத விரோதிகளல்ல"

கோப்பாய், புதன்

"எந்தச் சாகியத்தாருக்காயினும் சரி எந்தச் சமயத்தவருக்காயினும் சரி இம்மியளவேனும் துரோகம் செய்யமனதாலும் நினைக்கமாட்டோம். சிலர் சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட்கட்சி என்றவுடனே தங்கள் தங்கள் சமயத்துக்குத் துரோகம்செய்கிறவர்கள் வளர வொட்டாது தடுக்கின்றவர்கள் என்றதப்பபிப்பிராயம் மக்களிடையே இன்னும் நிலவிவருகின்றது. இவ்விதம் சொல்லுபவர் மேல் தான் இக்குறை சர்ரும்.

1956ம் ஆண்டு கனவி மகாநாட்டிலே யு. என். பி. தனிச் சிங்களச்சட்டத்தைக் கொண்டு வந்தபோது அதை எதிர்த்து வாதாடினோம். தமிழ்மக்களின் நன்மை கருதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பாதயாத்திரையைத் தடுத்தோம். மலைநாட்டுத்தமிழர் வாக்குரிமை விஷயத்திலும் அயராது உழைத்தோம். எத்தனையோ ஆக்கவேலைத் திட்டங்கள் எல்லாவற்றையும் செய்துவருகிறோம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்களின் நன்மை கருதி எத்தனையோ ஆலைகளைத் தென் இலங்கையில் உற்பத்தியாக்கி விட்டது. படிமுறையாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் இந்திட்டத்தை விரைவில் கொண்டுவர எத்தனித்துள்ளது."

இவ்வாறு உருப்பராயில் நடைபெற்ற சமசமாஜக்கட்சிக் கூட்டமொன்றில் திரு. பெர்னாட் சொய்ஸா பேசுகையில் குறிப்பிட்டார்.

கோப்பாய்த்தொகுதிஅபேட்சகர் திரு. மா. துரைராஜா குறிப்பிட்டதாவது:-

இன்றுதேசியமயத் திட்டம் வெற்றிநடைகொண்டு இருப்பதினால் சிறுபான்மையோருக்குப் பாதகம் அற்ற முறையில் சோஷலிச சமுதாயம் நன்கிலையில் விருத்தியாகும் என்பது எமது திண்ணம். முறைவளித்துவத்தை அகற்றி எல்லோரும் ஒரே சமத்துவத்துடன் இருக்கவேண்டும் என்னும் நோக்கத்துடனேயே இந்திட்டத்தை அமுலாக்கி நடைமுறையில் கொண்டுவந்தோம்,

மரண அறிவித்தல்

கோலாலம்பூர் இலைப்பாநிய எப். ஏயும் (Financial Assistant), சிலாங்கூர் கந்தசுவாமி கோவில் நிர்வாக சபைத் தலைவருமாகிய திரு ஆ. செல்வந்திநாதன் அவர்கள் சென்ற ஞாயிற்றுக் கிழமை (14-3-65) காலமானார்கள்.

ஆ. சுவாமிநாதன்

மல்லாகம்
17-3-65. 1602

"நமக்கென ஓர் இடம் வேண்டும்"

முதூர், புதன்

"நாம் வாழ நம் இனம் வாழ நமக்கென ஓர் பிரதேசம் வேண்டும். மொழிவாழ இனம் வாழும், இனம்வாழ மொழி வாழும். எனவே இனம் வாழப் பிரதேசம்வேண்டும். இப்படி நமக்கென ஓர் பிரதேசம் இல்லாதிருந்தால நம்மொழி அழியும். மொழி அழிய நாமும் அழிவோம். அதனால்தான் அன்றுமுதல் இன்றுவரை எமக்கென ஓர் பிரதேசம் வேண்டும். நாங்களும் உங்களுடன் சரிநிகர்சமமாக வாழ்க்கை நடத்தவேண்டும். நாங்களும் சுதந்திரப் பிரஜைகள். எங்களுக்கும் பேச்சுரிமை உண்டு, எழுத்துரிமை உண்டு, குடியுரிமையுண்டு. எங்களையும் வாழவிடுங்கள் என்று எடுத்துக் கூறினருகிறது இலங்கை தமிழரசுக்கட்சி" என்று திரு. ஈழவேந்தன் முதூர் தொகுதியில் தமிழரசுக்கட்சிவேட்பாளர் ஜனாப எம். ஈ. எச். முகமதலியை ஆதரித்து நடந்த கூட்டத்தில் கூறினார்.

உடுவில் முன்னாள் எம். பி. திரு. தர்மலிங்கம், ஊர்காவற்றுறை முன்னாள் எம். பி. திரு. வி. நவரத்தினம், முதூர் முன்னாள் எம். பி. முகமதலி, தலைவர் செல்வநாயகம் உட்பட்டப் பலர் பேசினர்.

வாலிபமுன்னணி

துணுக்காய், புதன்

இலங்கைத் தமிழ்அரசுக் கட்சியின் ஸதந்தபுரம் வாலிபமுன்னணியின் கிளைக்கூட்டம் கிளிநொச்சித் தொகுதி தமிழ் அரசுக்கட்சி வேட்பாளர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது. உத்தியோகத்தர் விபரம்:

தலைவர் திரு. வி. கந்தையா, செயலாளர்-திரு. கு. யோசெப், தனாதிகாரி- திரு. செ. தம்பையா.

தமிழரசுக்கட்சியின் கனகபுரம் வாலிபமுன்னணிக்கிளை ஒன்று பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையின்கீழ் ஆரம்பித்துவைக்கப்பட்டது

உத்தியோகத்தர் விபரம்: தலைவர்-திரு.பொ. தம்பிராசா, செயலாளர்- திரு. செ. சோமசுந்தரம், தனாதிகாரி- பி. பி. சேவியர்.

தமிழரசுக்கட்சியின் கல்வெட்டித்திடல் வாலிபமுன்னணிக்கிளை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் விபரம்: தலைவர்- திரு. செ. கந்தையா, செயலாளர்- தா. தம்பு, தனாதிகாரி- அ. சிற்றம்பலம்.

யாழ்ப்பாணத்தில் உதவிபொலிஸ் அதீபர்

மாவிட்டபுரம், செவ்

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல திரு. அலரிக் அபயசுந்தரவர்த்தனஇன்று விமானத்தில் பலாலி வந்து சேர்ந்தார். காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் ஆகியவைகளுக்கு பொலிஸ் அதிகாரிகளோடுஅவர் ஆலோசனைசெய்தார். பொதுத்தேர்தல் ஒழுங்குகள் பற்றி அவர் பேச்சுவார்த்தைநடத்தியதாகத் தெரிகிறது.

"ஏற்றத்தாழ்வு நீங்கும்"

முதூர், புதன்

'பொது மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதுடன் ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்து, இந்நாட்டு மக்களின் இரத்தம் ஒரு சொட்டுக்கூட சிந்தாமல் தாயகத்தை ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுதலை செய்த அமரர் திரு. டி. எஸ். சேனாநாயக்கா அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் அரசாங்கத்தை அமைப்பதே எமது நோக்கம்"

இவ்வாறு முதூர்த் தொகுதியில் யு. என். பி. சார்பில் போட்டியிடும் திரு. எச். டி. எல். லீலாரெட்ணவை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கொழும்பு-மேயர் ஜனாப ஜாபீர் ஏ. காதர் கூறினார்

ஜனாப் மரைக்காயர் பேசுகையில் "அரசாங்கம் முஸ்லிம் மக்களுக்குச் சில நன்மை செய்யக் காரணம் தமிழ்த் தாயின் மொழியுரிமை, குடியுரிமை போன்ய உரிமைப் போராட்டங்களேயாகும் என்றார்"

மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவரும் கொழும்பு தெற்கு தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினருமான திரு ஜே ஆர் ஜெயவர்த்தன, முதூர் ஐதே கட்சி வேட்பாளர் எச் டி எலி லீலா ரெட்ணா ஆகியோரும் பேசினர்.

பாரத உதவிக் கமிட்டி கூடியது

பாரிஸ், மார்ச் 17

பாரதத்தின் நடப்புத் திட்டத்தில் உதவி அளிப்பது பற்றி 10 நாடுகள் கொண்ட "இந்திய உதவிக் கமிட்டி" பாரிசில் கூடியது.

உருத்திரபுரத்தில் மருந்துச்சாலை

கிளிநொச்சி, புதன்

உருத்திபுரம் அரசினர் மருந்துச்சாலையை யாழ். மாவட்ட வைத்திய அத்தியட்சர் டாக்டர் எஸ். இராசரத்தினம் குத்துவிளக்கேற்றித் திறந்து வைத்தார். முதல் நோயாளியை டாக்டர் எஸ். இராசரத்தினம் பரிசோதித்து மருந்து கொடுத்தார். இதன் பின்னர் கிளிநொச்சி வைத்திய அதிகாரி டாக்டர் லூக குரூசப்பிள்ளை தலைமையில் ஓர் உபசாரக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் முன்னாள் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. சிவசுந்தரம், ஊர்காவற்றுறை அதிதியட்சகரின் காரியதரிசி திரு. எஸ். ஞானப்பிரகாசம், கரைச்சிக் கிராம முன்னேற்றச் சங்க சமாஜத் தலைவர் திரு. தங்கலதம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். 1952-ம் ஆண்டு கட்டப்பட்ட இவ்வைத்தியசாலை இன்னுள் வரையும் திறக்கப்படாதிருந்தது. வைத்தியசாலையில் தேவையான மருந்து வசதிகளும் நிரந்தரமாக ஓர் அப்போதிக்கரியும் கடமையாற்ற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஜெயந்திநகர், உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் கிராம முன்னேற்றச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து இவ்வைபவத்தைச் சிறப்பாக நடாத்தின.

பாரிஸ்டர் எம். சிவானந்தன்

அவர்களை ஆதரித்து

மாபெரும் கூட்டங்கள்

இன்று மாலை கொடிகாமத்தில் | நாளை மாலை சாவகச்சேரியில்

நடைபெறும்.

முக்கிய பேச்சாளர்கள்: திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், ரி. சிவசிதம்பரம், எம். சிவசிதம்பரம், வி. குமாரசாமி, எஸ். சிறீபாலசுந்தரன், என். சிவநேசன், என். எஸ். சிறீதரன், ஏ. கே. குணசிங்கராசா, எம். நூர்முகம்மது.

இவ்பத்திரிகை சமநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்படுகிறது.